[பேரவைத் துணைத் தலைவர்] [1984 மார்ச் 9

அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 15/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். '' தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1984) நிறைவேற்றப்பெற வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

5. அறிவிப்புகள்.

(அ) மகளிர் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1984 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1984 ஆம் ஆண்டு மகளிர் பல்கலைக் கழக சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) மகளிர் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1984 ஆம் ஆண்டு மகளிர் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு **(சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

** 1984ம் ஆண்டு பிப்ரவரி 21ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.